செ.வெ. எண்: 373 நாள்: 28.06.2012

# இராஜீவ் காந்தி சாலை (கட்டம் I)

## 01 ஜுலை 2012 முதல் திருத்தியமைக்கப்பட்ட சுங்கக் கட்டணம் மற்றும் சலுகைக் கட்டண அனுமதிச் சீட்டு விவரங்கள் பற்றிய அறிவிப்பு

அரசு ஆணை (நிலை) எண்.45 நெடுஞ்சாலை (HW I) துறை, நாள் 23.02.2005 வாயிலாக தமிழக அரசு, இந்திய சுங்கக் கட்டண சட்டம், 1851 ன் கீழ் பல்வேறு வகையான வாகனங்களுக்கு இராஜீவ் காந்தி சாலையினை உபயோகப்படுத்த சுங்கக் கட்டணம் நிர்ணயம் செய்து அறிவித்தது. இச் சுங்கக் கட்டணமானது 30 வருட காலத்திற்கு, அதாவது 01 ஜுலை 2006 முதல் 30 ஜுன் 2036 வரை ஒவ்வொரு இரண்டு வருடக் காலத்திற்கும் 10 சதவீத உயர்வுடன் கூடியதாகும். மேற்குறிப்பிட்ட காலத்தில் சுங்கக் கட்டணம் வசூலிக்க, ஐ டி எக்ஸ்பிரஸ்வே லிமிடெட் நிறுவனத்தினை அரசு நியமித்துள்ளது. எனினும், சுங்கக் கட்டணம் வசூலிப்பது 15.12.2008 முதல்தான் தொடங்கப்பட்டது. இது குறித்த விவரம் அனைத்து பத்திரிகைகள் வாயிலாக முன்பே தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு இக்கட்டண விகிதத்தை ஒரு முறை செல்வதற்காக மட்டுமே நிர்ணயித்திருந்தது. எனினும், அனைத்து தரப்பினரின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு ஐ டி எக்ஸ்பிரஸ்வே நிறுவனம் பல்வேறு வகை வாகனங்களுக்கும் ஒரு முறை சென்று திரும்ப, தினசரி மற்றும் மாதம் முழுவதும் பல முறை சென்று வர சலுகைக் கட்டண முறையையும் உள்ளூர் வாசிகளின் வணிக பயன்பாட்டு வாகனங்களுக்கு மாதந்திர சலுகை கட்டண விகிதத்தையும் நிர்ணயித்துள்ளது.

01 ஜுலை 2012 முதல் 30 ஜுன் 2014 ம் ஆண்டு வரை பல்வேறு வகையான வாகனங்களுக்கு திருத்தியமைக்கப்பட்ட சுங்கக் கட்டணம் மற்றும் சலுகைக் கட்டண விவரம் பின்வருமாறு:

### திருத்தியமைக்கப்பட்ட சுங்கக் கட்டண விவரம்

தொகை ரூபாயில்

| பயண விவரம் | 01 ஜுலை 2012 முதல் 30 ஜுன் 2014 வரை | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ஒரு முறை செல்ல | ஒரு முறை சென்று திரும்பி வருவதற்கு | தினசரி பல முறை சென்று திரும்ப | மாதம் முழுவதும் பல முறை சென்று திரும்ப | உள்ளூர் வணிக வாகனங்களுக்கான மாத அனுமதி*# | பயண அடிப்படையிலான அட்டை |
| மூன்று சக்கர வாகனம் | 7.00 | 12.00 | 20.00 | 200.00 | 120.00 | பொருந்தாது |
| கார் | 20.00 | 38.00 | 65.00 | 1550.00 | 120.00 | 700.00 |
| உள்ளூர் வணிக வாகனம் | 34.00 | 60.00 | 90.00 | 2100.00 | 180.00 | பொருந்தாது |
| பேருந்து | 54.00 | 100.00 | 150.00 | 3450.00 | பொருந்தாது | பொருந்தாது |
| டிரக் | 80.00 | 140.00 | 220.00 | 5100.00 | 605.00 | பொருந்தாது |
| பல் அச்சு வாகனம் | 160.00 | 290.00 | 440.00 | 10300.00 | 605.00 | பொருந்தாது |

*ஒரு முறை நிர்வாக கட்டணத் தொகையாக ஸ்மார்ட் கார்டுக்கு ரூ.100 கூடுதலாக வசூலிக்கப்படும்.

# நிபந்தனைகளுக்கு உட்பட்டது

| | |
|---|---|
| ஒருமுறை சென்று திரும்ப | வழங்கப்பட்ட நேரத்திலிருந்து 24 மணி நேரத்திற்குள் ஒரு முறை சென்று திரும்ப (இரண்டு டிரிப்) செல்லுபடியாகும் |
| ஒரு நாளில் பலமுறை சென்று திரும்ப | ஒருநாளில் பலமுறை சென்று திரும்ப வழங்கப்பட்ட நேரத்திலிருந்து 24 மணிநேரத்திற்கு செல்லுபடியாகும் |
| மாத அனுமதி | குறிப்பிட்ட மாதத்திற்கு பல முறை சென்று வர செல்லுபடியாகும்<br>(எடுத்துக்காட்டு: 21 பிப்ரவரி 2012 முதல் 20 மார்ச் 2012 வரை) |
| செல்லுபடி விவரம் | அனைத்து அனுமதி சீட்டுகளும் குறிப்பிட்டுள்ள வாகனங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். மாற்றத்தக்கதல்ல |
| விலக்கு அளிக்கப்பட்ட வாகனங்கள் | ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பட்டியலில் மாற்றம் ஏதும் இல்லை |

| | |
|---|---|
| **மேலும் கூடுதல் விவரங்கள் மற்றும் உதவிக்கு**<br><br>தொலைபேசி: 044–2496 7755,<br>கைப்பேசி: 96000 01051, 98407 21213, 98407 21215 | **இணையத்தள உதவிக்கு:**<br>http://www.tnrdc.com/itel/ |

**வெளியீடு: –**

**இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.